# பசுபதி அவர்களின் இரண்டு வெண்பாக்கள்

மண்நேய நல்லுரத்தில் மார்க்ஸீய செம்புனல்பாய்
பண்ணைப் பயிர்பெற்ற பாராட்டைக் காணீர்!
தொராந்தோ இயல்விருது சொல்லேர் உழவர்
சுராவின் எழுத்துக்கோர் ஷொட்டு.

[ பிரபல எழுத்தாளர் திரு சுந்தர ராமசாமி (சு.ரா) வுக்குக் கனடாவில் உள்ள டொரான்டோ பல்கலைக் கழகத்தின் தென் ஆசியப் பிரிவும், 'தமிழ் இலக்கியத் தோட்டமும் இணைந்து மே 25, 2001 -அன்று 'இயல் விருது ' வழங்கிய நிகழ்ச்சி கண்டு எழுதியது.]

( திண்ணை இதழில் வந்தது )

மதிப்புமிக்க எழுத்தாளர் திரு ஜெயமோகனுக்கு 13 யூன் 2015 அன்று தமிழ் இலக்கியத் தோட்டம் இயல் விருது வழங்கியது. அதைப் பாராட்டி பசுபதி அவர்கள் எழுதிய வெண்பா.

**தொரந்தோ இலக்கியத் தோட்டம் அளித்த**
**பெருமை இயல்விருதுப் பேறு --- பரந்த**
**திறமை தெறிக்கும் ஜெயமோகன் நூல்கள்**
**சிறப்புக்கு மற்றுமோர் செண்டு.**